ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 5 இதழ் : 8 ஜுன் 2009



**உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்.**

சங். 119:18

ஆசிரியர் **சகோ. வே. தேவதாஸ்**



## சுதேச ஊழியர் சாட்சி

# சகோ. சுரேஷ் ஹட்டிலா

குஜராத்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் சுரேஷ். நான் குஜராத்திலுள்ள தாகோத் மாவட்டத்தைச் சேர்ந்த கத்துவாரா கிராமத்திலுள்ள பீல் ஆதிவாசி. எனது தந்தை ஒரு காவல்துறைஅதிகாரி. எனது தகப்பனார் அகமதாபாத் நகரில் வேலை பார்த்ததால் நானும் அங்கு சென்று நன்றாக கல்வி பயின்றேன். மேலும் நான் நல்ல பலசா போன்று இருந்தபடியால் எல்லாவித துர்குணங்களையும் செய்ய ஆரம்பித்தேன். சாராயம், பீடி குடித்தல், தம்பாக்கு சாப்பிடுதல், விபச்சாரம் இப்படி நான் செய்யாத பாவங்களே கிடையாது. நான் விக்கிரகங்களையும் துர்தேவதைகளையும் வணங்கிவந்தேன். கிறிஸ்தவர்களை தாழ்ந்த ஜாதி என்றும் தீண்டத்தகாதவர்கள் என்றும் கூறி, கிறிஸ்தவத்தையே வெறுத்து வந்தேன். இந்த சூழ்நிலையில் பல ஆண்டுகளாக தீய சக்திகளால் பாதிக்கப்பட்டு இரத்தவாந்தி எடுத்துவந்த என்னுடைய மாமனார் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு பூரண விடுதலை பெற்றார். இவர் கிறிஸ்தவராக மாறிய காரணத்தால் அவரை நான் வெறுத்து, அவரிடம் பேசுவதையும், அவர் வீட்டிற்குச் செல்வதையும் விட்டுவிட்டேன். மேலும் எனது மனைவியையும் அவர்கள் வீட்டிற்குச் செல்லக்கூடாது என துன்புறுத்தினேன்.

ஒரு நாள் எனது மாமனாரை மிஷனெரி சகோதரருடன் பார்த்தேன். அவர்கள் இருவரும் தல்லா கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்தார்கள். என்னையும் அவர்களோடு வரும்படி அன்போடு அழைத்தார்கள். மறுக்க இயலாமல் அவர்களோடு சென்றேன். அங்கு சென்று கூட்டத்தில் ஓரமாக அமர்ந்திருந்தேன். தேவனுடைய வார்த்தை என் உள்ளத்தை ஊடுருவிச் சென்றது. இயேசு கிறிஸ்துவையும், அவருடைய அன்பையும் பற்றி அறிந்து கொண்ட நான் என்னை தேவனுக்கென்று ஊழியம் செய்ய அர்ப்பணித்தேன்.

என் வாழ்நாளில் இருளில் வாழும் என் ஜனங்கள் அனைவரும் இயேசு என்ற ஒளியினிடத்திற்கு வந்துவிட வேண்டும் என்பதே எனது வாஞ்சை. ஷாலோம் குறுகிய கால வேதாகம பயிற்சி எடுத்து, ஆவிக்குரிய வரங்களைப் பெற்று ஊழியம் செய்து வருகின்றேன். எனக்காகவும், எனது மனைவி சன்னுபேன் மற்றும் நான்கு குழந்தைகளுக்காகவும் ஜெபியுங்கள்...

இந்த சுதேச ஊழியரை தாங்குவோர் : **Jesus Redeems**, Nalumavadi.

# உங்கள் சகோதரனிடமிருந்து....



ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

தேவ கிருபையாலும் உங்கள் யாவரின் ஜெபங்களினாலும், தியாகமான காணிக்கைகளினாலும் பீல் மக்கள் மத்தியில் ஊழியங்கள் மிக ஆசீர்வாதமாக நடந்து வருகிறது. கடந்த மே மாதத்தில் 20,000 பிள்ளைகளுக்கு Children Bible Class நடத்த தேவன் கிருபை தந்தார். மேலும் CBN ஸ்தாபனத்தின் மூலமாக இராஜஸ்தான் மாநிலத்தில் 25 கிராமங்களில் ஆழ்குழாய் கிணறுகள் போடுகின்ற பணியையும் நிறைவேற்ற தேவன் கிருபை செய்தார்.

தேவ கிருபையினால் 20 கிராமங்களில் ஆலய கட்டுமான பணிகள் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. தடையின்றி ஆலயங்கள் கட்டப்பட தொடர்ந்து ஜெபியுங்கள். இந்த ஜுன் மாதத்தில் பள்ளிகள் திறக்கப்பட உள்ளது. நம் ஷாலோம் ஊழியர்களின் பிள்ளைகள், மற்றும் நம் ஊழியத்தின் மூலமாக விடுதிகளிலும், பள்ளிகளிலும் தாங்கப்பட்டும் வரும் 950 ஆதிவாசி மாணவர்களின் கல்விப் பணிக்காக தேவைகள் **ரூ. 4,75,000/–** சந்திக்கப்பட விசேஷமாக ஜெபியுங்கள். நாங்கள் உங்கள் சபை வளர்ச்சிக்காகவும், உங்கள் குடும்பங்களின் பிள்ளைகள் யாவருக்காகவும் ஜெபிக்கிறோம். இந்த கல்வி ஆண்டில் உங்கள் பிள்ளைகளை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக!

தேவன்தாமே நம் அனைவரின் ஜெபங்களையும் கேட்டு மத்தியில் நல்லாட்சி மலர கிருபை புரிந்துள்ளார். பிரதம மந்திரி **“மன்மோகன் சிங்”** மற்றும் கேபினட் மந்திரிகள் மேலும் அனைத்து M.P.–கள் அனைவரும் தேசத்திற்காக உண்மையோடும், உத்தமத்தோடும் உழைக்க தொடர்ந்து ஜெபியுங்கள். வரும் ஐந்து வருடங்கள் நம் தேசத்தில் நிலையான ஆட்சியை தந்து நல்ல திட்டங்களின் மூலமாக தேசம் ஆசீர்வாதமாக விளங்க வாழ்த்துகிறோம், ஜெபிக்கிறோம்.

எங்களுடைய பிள்கைள் Titus (MBA I year), Shalom (B.Tech III Year, Media Tech), Shakinah +2 நன்றாக படிக்கவும் கர்த்தருக்குள் வளரவும் ஜெபியுங்கள்.

தேவ கிருபை நம்முடன் இருப்பதாக!

**“உன்மே–ருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயி–ருந்தும், உன் சந்ததியின் வாயி–ருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயி–ருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்; இது எனக்கு அவர்களோடிருக்கும் என் உடன்படிக்கையென்று கர்த்தர் சொல்லுகிறார்.”** ஏசா. 59:21

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**



# கண்கள் திறக்கப்பட வேண்டும்

சிறப்புச் செய்தி : **சகோ. V. தேவதாஸ்**

தேவன் படைத்த சரீரத்தில் மிக முக்கியமான ஒரு அவயவம் கண். கண்களுக்கு ஆண்டவர் விசேஷித்த பாதுகாவலையும் கொடுத்துள்ளார் . **"கண்ணானது சரீரத்தின் விளக்காய் இருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாய் இருக்கும்; இப்படி, உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாய் இருக்கும்!"** (மத்தேயு 6:22&23) – இயேசு கிறிஸ்து இவ்வாறு அழகாக கூறியுள்ளார். **"நீங்கள் இதை புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்"** (ஆதி 3:5) என்று கூறி ஆதாம், ஏவாளை பிசாசானவன் ஏமாற்றியதால் பாவத்தின் நிமித்தமான கண்கள் திறக்கப்பட்டன. ஆனால் தேவன் கொடுத்த பரிசுத்த கண்கள் குருடானது. இன்றும் நம் பாவக் கண்களினால் அநேக முறை தேவனுடைய சித்தங்களையும் திட்டங்களையும் அறியாமல் போகிறோம். வேதத்தில் அநேக தேவ பிள்ளைகளின் கண்களை தேவன் திறந்து தம்மை வெளிப்படுத்தி தம் திட்டங்களை நிறைவேற்றுகிறார். இப்பொழுதும் சில காரியங்களை நாம் தியானிப்போம். தேவன் நம் கண்களை திறக்கும் போது என்ன என்ன நடைபெறுகிறது என்பதை தியானிப்போம்.

முதலாவதாக, எண் 22:31–34 வாசித்து பாருங்கள் பிலேயாம் தீர்க்கதரிசி தன்னுடைய பிழைகளை, தவறுகளை அறிந்து கொள்ள தேவன் பிலேயாமை சுமந்து சென்ற கழுதையின் வாயை முதலாவது திறக்கிறார். அது ஏன் எதற்காக பேசுகிறது? அது ஏன் வழியை தடை செய்கிறது என்பதை அவனால் அறிய முடியவில்லை. அப்போது கர்த்தர் பிலேயாமின் கண்களைத் திறந்தார். அப்போது அவன் தேவதூதனை கண்டான். தான் சரியான பாதையில் செல்ல தேவசித்தத்தின்படி ஊழியம் செய்ய வழிநடத்தப்பட்டான். நாம் தேவனுடைய பிள்ளைகளாய் தேவ ஊழியர்களாய் கர்த்தருக்கு உண்மையாய் வாழும் போது, உண்மையாய் வாழும் நாம் சில வேளைகளில் தவறாக செல்லும்போது தேவன் நம்முடைய கண்களைத் திறக்கிறார். தேவன் அப்படியாக திறக்கும் போது நாம் சரியான பாதையில் நடத்தப்படுகிறோம்.

இரண்டாவதாக, சங்கீதக்காரன் தேவனிடத்தில் வேண்டுகிறான், **"உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு என் கண்களை திறந்தருளும்."** (சங்கீதம் 119:18) பரிசுத்த வேதாகமம் தேவன் நமக்கு தந்த விலையேறபெற்ற பொக்கிஷமாகும். தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள,

ஆவிக்குரிய பெலன் நமக்கு கிடைக்க நமக்கு வேதம் உதவுகிறது. மட்டுமல்லாமல் வசனத்தை தியானிக்கும் போது நம் மீது உள்ள அபிஷேகம் பெருகும். ஆனால் வேதத்தை அநேகர் வாசிப்பதுண்டு. சிலர் சரித்திர நூலாக வாசிப்பது உண்டு, கதை நூலாக வாசிப்பதுண்டு, நல்ல போதகப் புத்தகமாக நினைப்பதுண்டு, உலகத்திலுள்ள எத்தனையோ தலைவர்கள் வேதத்தை நன்கு வாசித்து உள்ளார்கள். பல்லாயிரம் மக்கள் கிறிஸ்தவ பள்ளி கல்லூரிகளில் படிக்கும் போது வேதத்தை வாசித்திருக்கிறார்கள். வேதபுத்தகத்தைப் மிகவும் மரியாதையுடன் கனப்படுத்துவோரும் உண்டு. ஆனால் தேவன் ஒருவனுடைய கண்களை திறந்தால் தான் வேதத்திலுள்ள அதிசயங்களை காண முடியும். தேவபிள்ளைகளாகிய நாமும் கூட ஜெபத்துடன் தாகத்துடன் ஆண்டவரிடத்தில் வேண்டிக்கொள்ளும் போது, **“வேதத்தின் அதிசயங்களை காணும் படி என் கண்களைத் திறந்தருளும்”** என்று ஜெபித்து வேதத்தை வாசிக்கும் போது அநேக ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை நாம் பெற்றுகொள்வோம்.

மூன்றாவதாக, கர்த்தர் நம் தேவைகளை அறிந்து முன் கூட்டியே உருவாக்கி வைத்துள்ளார் என்பதை நாம் அறிய வேண்டும் அப்படி அறிவதற்கு தேவன் நம் கண்களை திறக்க வேண்டும். ஆதியாகமம் வசனத்தை வாசித்து பாருங்கள். **“தேவன் பிள்ளையின் சத்தத்தை கேட்டார். “தேவதூதன் வானத்தி–ருந்து ஆகாரைக் கூப்பிட்டு; ஆகாரே, உனக்கு என்ன சம்பவித்தது, பயப்படாதே, பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன் அவன் சத்தத்தைக் கேட்டார்.”** (ஆதி. 21:17). தேவன் அவளுடைய கண்களை திறந்தார். அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த் துரவைக்கண்டு, போய், துருத்தியிலே தண்ணீர் நிரப்பி, பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாளள். ஒரு அடிமைப் பெண்ணின் அழுகுரலை ஆபிரகாமின் நிமித்தமாக தேவன் கேட்டார். பிள்ளை சாகப் போகிறது. அது துடி துடிக்கும் வேளையில், தேவன் பிள்ளையின் சத்தத்தை கேட்டது மட்டுமல்ல அவர் ஆகாருடன் பேசி, பிள்ளையின் எதிர் காலத்தையும் விளக்கினார். மட்டுமல்ல அங்கிருந்த துரவில் உள்ள தண்ணீரையும் காட்டினார். தேவன் ஆகாருக்கு ஏற்கனவே அங்கு தண்ணீர்த் துரவை ஏற்படுத்தியுள்ளார். ஆனால் அதை ஆகார் காணவில்லை. நம் வாழ்வில் கூட நம் தேவைகள் மிக அவசியமாக இருக்கும் போது, தேவன் அவைகளை நமக்காக ஏற்கனவே உண்டுபண்ணி வைத்துவிட்டார். அதை தேவன் நமக்குக்காட்டும்படியாக அவர் நம் கண்களை திறக்கட்டும். ஆகாரின் கண்களை திறந்த தேவனே என் தேவைகளை சந்திக்கிறீர். ஏனெனில் நீர் என்னை காண்கிற தேவன் என்று அறிக்கை செய்யும் போது, எனக்கன்பானவர்களே, தேவன் உங்கள் கண்களை திறப்பார். அதிசயங்களை நீங்கள் பெற்று கொள்ளுவீர்கள்.

நான்காவதாக, தேவஜனமாகிய நமமைச் சுற்றி எதிராளிகள் திட்டங்கள் தீட்டும்போது, எதிராக நிற்கும் போது நம்மைச் சுற்றி தேவன் தெய்வீக பாதுகாவல்

வைத்திருக்கிறார். இதனை அறிந்து கொள்ள நம் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட வேண்டும்.

தேவனுடைய தீர்க்கதரிசியாகிற எ–சாவைப் பிடிக்கும்படியாய் சீரியா ராஜா **“குதிரைகளையும், இரதங்களையும், பலத்த இராணுவத்தையும் அனுப்பினான். அவர்கள் இராக்காலத்திலே வந்து பட்டணத்தை வளைந்துகொண்டார்கள்.”**

**தேவனுடைய மனுஷனின் வேலைக்காரன் அதிகாலமே எழுந்து வெளியே புறப்படுகையில், இதோ, இராணுவமும் குதிரைகளும் இரதங்களும் பட்டணத்தைச் சுற்றிக்கொண்டிருக்கக் கண்டான்; அப்பொழுது வேலைக்காரன் அவனை நோக்கி: ஐயோ, என் ஆண்டவனே, என்னசெய்வோம் என்றான்.”**

**“அதற்கு அவன் : பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப்பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான்.”** 2 இராஜா 6:14–16. வேலைக்காரன் பயந்தபோது எ–சா விண்ணப்பம் செய்கிறான். கர்த்தர் அந்த வேலைக்காரனின் கண்களைத் திறக்க வேண்டும் என வேண்டுகிறான். கர்த்தர் வேலைக்காரனுடை கண்களைத் திறந்தார். அப்போது தேவனுடைய மகிமையான பாதுகாப்பை அவன் கண்டான். **“அப்பொழுது எ–சா விண்ணப்பம் பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்: உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எ–சாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை அவன் கண்டான்.** 2 இராஜா 6:17.

நாம் கர்த்தருடைய பிள்ளைகளாய் ஜீவிக்கும்போதும், நாம் அவருக்காக ஊழியம் செய்யும்போதும் தேவன் நிச்சயமாகவே நமக்குப் நல்ல பாதுகாவலைத் தருவார். தம் இருதயத்திற்கு ஏற்றதாக வாழ்ந்த தாவீதின் வாழ்க்கையைப் பாருங்கள் 2சாமுவேல் 7:14ல் தாவீது சென்ற எல்லா இடங்களிலும் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்.

ஒரு சில வருடங்களுக்கு முன்பு குஜராத், ஜாலோத்தில் எங்கள் ஊழியப் பாதையில் ஒருவர் குடித்துவிட்டு வீட்டிற்குள் வந்தார். நான் அவரை உள்ளே வரவழைத்து தேநீர் கொடுத்து அவரிடம் பேச ஆரம்பித்தேன். அவருடைய கை, கால்கள் ஆட ஆரம்பித்தன. அவர் நடுக்கத்துடன் கூற ஆரம்பித்தார். “ஐயா, உங்களைக் கொல்வதற்காக ஒரு பெரிய கத்தியுடன் உங்கள் வீட்டை நோக்கி வந்தேன்”. ஆனால் சில அடிகள் முன்பதாக உங்கள் வீட்டை சுற்றிலும் ஒரு அக்கினி வளையத்தைக் கண்டேன். அதனால் உள்ளே வர இயலவில்லை. “அந்த கத்தியை வய–ல் தூக்கி எறிந்துவிட்டு மன்னிப்புக் கேட்க வந்தேன்” என்று கதறி அழுதார்.

எனக்கு அன்பானவர்களே, நாம் கர்த்தருக்காக வாழும்போது நம்மை சுற்றி அந்தகாரங்கள், சாத்தானின் சூழ்ச்சிகள் நெருங்கும் போதெல்லாம் தேவன் பாதுகாப்பை நமக்கத் தந்தருளுவார். தேவன் நம் ஆவிக்குரிய கண்களை திறக்கும்போது நிச்சயமாகவே நாம் அதைக் கண்டு கொள்ளலாம்.

கடைசியாக நாம் இயேசுவை அறிந்து கொள்ள நம்முடைய கண்கள் திறக்கப்பட வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளில் எம்மாவு என்ற கிராமத்திற்கு சீஷர்கள் வழிப் பயணமாய் நடந்து செல்கையில், இயேசு அவர்களோடு கூட நடந்து வருகிறார். மூன்றரை வருடங்கள் இயேசுவோடு கூட வாழ்ந்து ஊழியம் செய்தாலும் இயேசுவைக் காண முடியாதபடி அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டன. மனித அதிகாரங்களைக் குறித்த பயம், எதிர்காலத்தைக் குறித்த பயம் மற்றும் அவிசுவாசம் இவை அவர்களுடைய கண்களை இயேசுவை காண முடியாதபடிக்கு மறைத்து விட்டன. ஆனால் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து அவர்களோடு பந்தியிருந்தார். அப்பத்தை எடுத்து, அதைப் பிட்டு ஆசீர்வதித்துக் கொடுத்தார். இயேசுவின் கைகளி—ருந்து பெற்றுக் கொண்ட அப்பத்தைப் புசித்த போது **“..... அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள்.”** (லூக்கா 24:31) அவர்கள் இயேசுவை அறிந்து கொள்வதற்கு கர்த்தர் அவர்களுடைய கண்களை திறக்க வேண்டியது அவசியமாயிருந்தது. நம்முடைய வாழ்க்கையில் அநேக நேரங்களில் இயேசு நம்முடன் இருக்கிறாரா என்று அவிசுவாசத்தோடு இருக்கிறோம். நம்முடைய வாழ்க்கையிலும் ஊழியப் பாதையிலும் பிரச்சினைகள், எதிர்ப்புகள் வரும்போது நாம் கலங்கி நிற்கிறோம். ஆனால் மத். 28:28ல் **“....இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்”** என்று வாக்குக் கொடுத்த இயேசு கிறிஸ்து நம்மோடு கூட இருக்கிறார் அநேக வேளைகளில் பணித்தளத்தில் அநேக பிரச்சனைகள், கஷ்டங்கள் வரும்போது நாங்கள் குடும்பமாக ஜெபிப்பது உண்டு மேலும் அநேக நேரங்களில் பணித்தளத்தில் ஊழியர்களோடு கூட இணைந்து துதித்து, ஆராதித்து ஊழியத்திற்காக ஜெபிப்பதுண்டு. இந்த வேளைகளிலெல்லாம் அநேக முறை நாங்கள் இயேசு கிறிஸ்துவை முகமுகமாய் தரிசித்தது உண்டு. இயேசு கிறிஸ்துவே அசீர்வதிப்பதும், பல திட்டங்களை விளக்கிக் கொடுப்பதும் உண்டு. அப்படி நடக்கும்போதெல்லாம் எங்களுக்குள் தெய்வீக சந்தோஷமும், சமாதானமும் பெருகும். நம்முடைய ஷாலோம் ஊழியங்களின் வளர்ச்சிக்கு இது ஒரு முக்கிய காரணமாகும். எனக்கு அன்பானவர்களே, நம்முடைய வாழ்க்கைப் பாதையிலே, குடும்பத்திலே, நம்முடைய ஊழியத்திலே எப்படிப்பட்ட சூழ்நிலைகள் வந்தாலும் இயேசு நம்மோடு கூட இருக்கிறார் என்பதை நாம் மறந்து போக வேண்டாம். தேவன்தாமே நம்முடைய ஆவிக்குரிய கண்களைத் திறந்து இயேசு நம்மோடு கூட இருப்பதை உணர்த்துவாராக. நம்முடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு, தேவன் நமக்கு வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்வோமாக!

## *துதியுங்கள்....*

- ❖ கடந்த மே மாதம் 520 இடங்களில் நடைபெற்ற CBC-யை கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார். சுமார் 20000–க்கும் அதிகமான ஆதிவாசி சிறுபிள்ளைகள் பங்கு பெற்று இரட்சிப்பையும், ஆசீர்வாதத்தையும், அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டனர்.
- ❖ இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பான்ஸ்வாடா மாவட்டத்தில் 25 கிராமங்களில் நம் ஸ்தாபனத்தின் மூலம் அடி குழாய் போட தேவன் உதவி செய்தார்.
- ❖ பணித்தளத்தில் நம் ஊழியர்களையும், விசுவாசிகளையும் கர்த்தர் பாதுகாத்தார். குறிப்பாக வெயி–ன் கொடுமையி–ருந்து பாதுகாத்தார்.
- ❖ மே மாதத்தில் நடைபெற்ற ஊழியர்கள் கூடுகைகள், பெண்கள் கூடுகை, மூப்பர்கள் கூடுகையை தேவன் ஆசீர்வதித்தார்.
- ❖ சகோ. தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர் கூட்டத்திலும் மற்றும் ஒரு சில கூட்டங்களிலும் செய்தி கொடுக்கவும் தேவன் கிருபை பாராட்டினார்.
- ❖ நம்முடைய ஆதிவாசிபிள்ளைகள், ஆதரவாளர்களின் பிள்ளைகள் அரசு தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற தேவன் உதவி செய்தார்.
- ❖ நடைபெற்ற பாராளுமன்ற தேர்த–ல் தேவன் நமக்கு நல்ல தலைவர்களை எழுப்பியுள்ளார். அதற்காக தேவனை துதியுங்கள்.

## *ஜெபியுங்கள்....*

- ⌖ பீல் ஆதிவாசி மக்கள் தேவனை அறிந்துகொள்ளும்படியாக ஜெபியுங்கள்
- ⌖ சுதேச ஊழியர்களின் பரிசுத்த வாழ்வு, பாதுகாவல், சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.
- ⌖ கட்டப்பட்டுக்கொண்டிருக்கிற 20 கிராம ஆலயங்கள் தடையின்றி கட்டி முடிக்கப்பட ஜெபியுங்கள்.
- ⌖ நம் தேசத்திலும் குறிப்பாக நம் பீல் ஆதிவாசி மக்கள் பகுதியிலும் நல்ல மழையைத் தேவன் தந்து அவர்கள் விவசாயம் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- ⌖ புதிதாக அர்ப்பணித்துள்ள 40 சுதேச ஊழியர்களின் பயிற்சி முகாம்களுக்காக ஜெபியுங்கள்.
- ⌖ ஜுன் மாதத்தில் நடைபெற உள்ள ஊழியர்கள் கூடுகைக்காக ஜெபியுங்கள்.
- ⌖ நம்முடைய ஆதிவாசி சிறுபிள்ளைகளை பள்ளி மற்றும் விடுதிகளில் தங்கவைத்து படிக்க வைத்து வருகிறோம். இந்த புதிய கல்வியாண்டில் நம்முடைய மாணவர்களுக்கு தேவன் நல்ல ஞானத்தையும், சுகத்தையும் கொடுக்க ஜெபியுங்கள்.

- குறிப்பாக நம் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் 1,150–ல் 700 பிள்ளைகள் படித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய படிப்பு ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

- இந்த ஜுன் மாதம் நம் ஷாலோம் ஊழியத்தின் மூலமாக ஆதரிக்கப்பட்டு வரும் பிள்ளைகளுக்கு புத்தகங்கள், நோட்டு, சீருடைகள், கல்விக்கட்டணம் ஆகியவற்றிற்கு உதவிசெய்ய வேண்டும். இதற்கான தேவைகள் ரூ.4,75,000/– கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

- புதிய ஆதிவாசி மாணவர்களுக்கு மாதம் ரூ.400/– கொடுத்து தாங்கக்கூடிய ஆதரவாளர்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

- சகோ. தேவதாஸ், சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களின் பாதுகாவலுக்காகவும், சுகத்திற்காகவும், அவர்களின் பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினாவுக்காகவும் ஜெபியுங்கள்.


- தூத்துக்குடி தலைமையகம், குஜராத் பணித்தள அலுவலகத்தில் ஊழியம் செய்யும் தேவபிள்ளைகளுக்காக ஜெபியுங்கள்.

- நம் ஊழியத்தைத் தாங்கும் ஆதரவாளர்கள் குடும்பங்களுக்காகவும், பிரதிநிதிகள் மற்றும் அனைவருக்காகவும் ஜெபியுங்கள்.

***நாங்களும் உங்களுக்காக அனுதினமும் ஜெபித்து வருகிறோம்.***

## சிறப்பு நிதி ஆதரவாளர்கள் கவனத்திற்கு

நம் ஷாலோம் ஊழியத்தின் மூலமாக ஊழியர் மற்றும் விசுவாசிகளின் ஆதிவாசி பிள்ளைகள் 400 பேரைத் தாங்கி வருகிறோம். இவர்களின் சுமார் 73 பேருக்கு ஆதரவாளர்கள் கிடையாது. ஆனாலும் கூட மிகுந்த நெருக்கத்தின் மத்தியிலும் இவர்களை தாங்கி வருகிறோம். மட்டுமல்லாமல் இது தவிர நமது சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் சுமார் 500 பேர் தங்கள் வீட்டிலும், வேறு விடுதியிலும் கல்வி பயின்று வருகிறார்கள். இந்த ஜுன் மாதத்தில் பள்ளிக் கட்டணம் செலுத்தி படிக்க வைக்க வேண்டும் என்றும், இந்த ஊழியர்களின் பிள்ளைகளையும் நாம் ஜெபித்துத் தாங்க வேண்டும் என்றும் தீர்மானித்திருக்கிறோம். ஆகவே இந்தத் திட்டத்திற்காக ரூபாய். 4,75,000/– தேவைப்படுகிறது. இந்த தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்து ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் ஏவுகிற படி காணிக்கைகளை அனுப்பி உதவ மிக அன்பாய் கேட்கிறோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.



## EeLÞdÏ ERY GeLÞdÏ ERÜeLs

- உங்கள் விலாசத்தில் மாறுதல்கள், திருத்தங்கள் இருக்குமென்றால் சரி செய்து ***பழைய, புதிய முகவரிகளை*** தெரியப்படுத்துங்கள். ஏனெனில் நாங்கள் அனுப்புகின்ற பத்திரிக்கைகள் பல எங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றன. உங்களுக்கு ***ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிக்கைகள்*** வருகிறதென்றால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

- உங்கள் பகுதியில் நம் மிஷனெரி ஊழியத்தின் பிரதிநிதிகள் இருப்பார்கள் என்றால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் தலைமை அலுவலகத்திற்கு உங்கள் நகல் இரசீதும், பணமும் கிடைத்த பின்பு தலைமை அலுவலகத்தி–ருந்து உங்களுக்கு நன்றிக் கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

- நம்முடைய அலுவலகப்பணிகள் அனைத்தும் Computer மயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து ஆதரவாளர்களுக்கும் குறியீட்டு எண் (Sponser ID No) கொடுக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது தங்கள் குறியீட்டு எண்ணை (Sponser ID No) தவறாது எழுதுங்கள்.

- நீங்கள் அனுப்புகின்ற காணிக்கை, மணியார்டர், டிராப்ட், காசோலை மற்றும் கடிதங்களுக்கு அதிகபட்சமாக இரு வாரங்களுக்குள் இரசீதும், நன்றிக் கடிதமும் வரவில்லையென்றால், உடனடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குத் தொலைபேசி அல்லது கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டுகிறோம். அதற்கேற்ற நடவடிக்கை எடுக்க ஏதுவாயிருக்கும்.

- நீங்கள் M.O அனுப்பும் போது எங்களுக்குக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் உங்கள் ***தெளிவான முகவரியையும், ஜெபக்குறிப்புகளையும்*** எழுதி அனுப்பினால் உங்களுக்காக பாரத்துடன் ஜெபிக்க மிகவும் ஏதுவாயிருக்கும்.

- எங்களோடு தொடர்பு கொள்ளும்போது உங்களுடைய பங்காளர் எண்ணைக் (Partner No.) குறிப்பிடவும்.

## குழந்தை ஆதரவாளர்கள் கவனத்திற்கு

தேவன் நமக்கு இதுவரையில் சுமார் 25 ஆயிரம் ஆதிவாசி விசுவாச சிறுபிள்ளைகளை தந்துள்ளார். அவர்களில் 400 பிள்ளைகளை மட்டும் தெரிந்தெடுத்து ஷாலோம் விடுதியிலும் மற்றப் பள்ளியிலும் வைத்து படிக்க வைத்து கொண்டிருக்கிறோம். அதிலுள்ள குழந்தையைத்தான் நீங்கள் மாதந்தோறும் காணிக்கை கொடுத்து தாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த ஜூன் மாதத்தில் இவர்கள் தேர்ச்சி பெற்று அடுத்த வகுப்பிற்கு செல்ல இருக்கிறார்கள். ஆகவே இந்த மாதம் இவர்களுக்கு பள்ளி கட்டணம், புத்தகம், சீருடை ஆகியவற்றிற்கு நாம் உதவி செய்யவேண்டும். ஆகவே நீங்கள் தாங்கி வருகிற குழந்தைகளுக்கு ஜூன் மாத காணிக்கையுடன் ரூபாய் 500/– சேர்த்து அனுப்பி உதவ மிக அன்புடன் கேட்கிறோம். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

## சுதேச ஊழியர்கள் ஆதரவாளர்கள் கவனத்திற்கு

நம் அனைத்து பீல் சுதேச ஊழியர்களும் மிகவும் சிறப்பாக ஊழியம் செய்து கொண்டிருக்கிறார்கள். பீல் சுதேச ஊழியர்கள் மூலமாக தேவன் பலத்த அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து வருகிறார். நம் பீல் சுதேச ஊழியர்களில் பல ஊழியர்கள் தங்களுடைய வேலையையும், தொழிலையும் விட்டுவிட்டு ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார்கள். இந்த ஊழியர்களின் பிள்ளைகளுக்கு தேவன் விசேஷித்த ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். இவர்கள் பள்ளியில் மற்ற பிள்ளைகளைக் காட்டிலும் படிப்பில் சிறந்து விளங்குகின்றனர். ஊழியர்களின் பிள்ளைகள் அனைவருமே இந்த ஆண்டு தேர்ச்சி பெற்றுள்ளார்கள்.

இந்த ஜூன் மாதத்தில் ஊழியர்களின் பிள்ளைகள் அடுத்த புதிய கல்வியாண்டிற்குள் நுழையும்போது அவர்கள் படிப்பிற்காக நாம் தான் உதவி செய்ய வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு ஊழியர்கள் வீட்டிலும் சுமார் மூன்று அல்லது நான்கு பிள்ளைகள் கல்வி பயின்று வருகிறார்கள். ஆகையால் மிஷனெரிகளைத் தாங்கும் ஆதரவாளர்கள் தங்களுடைய மிஷனெரி பிள்ளைகளின் படிப்பிற்காக ரூ. 1000/– அல்லது அதற்கு மேல் ஜூன் மாத ஆதரவு தொகையுடன் அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம். நீங்கள் செய்கின்ற இந்த உதவி மூலமாக ஆதிவாசி சிறு பிள்ளைகள், நலம் பெற்று சமுதாயத்தில் நல்ல நிலைமைக்கு வருவார்கள்.

# SHALOM - CHILDREN BIBLE CLASS - 2009

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் ஷாலோம் ஊழியத்தில் சுமார் 25,000 Sunday Class பிள்ளைகளை தேவன் கொடுத்திருக்கிறார். இதில் படித்த மற்றும் படிப்பறிவு இல்லாத பிள்ளைகளும் உண்டு. இந்த பிள்ளைகளுக்கு கடந்த வருடத்தில் **"இயேசுவே இரட்சகர்"** என்ற தலைப்பில் சுமார் 20000 சிறுவர்களுக்கு CBC நடத்தப்பட்டது.

அதே போல் இந்த ஆண்டும் Training Unit –ல் இருக்கிற B.Th., படித்த **பாவ்சிங் பாய், அனில் சௌகான், ஜீனுசிங், விகாஸ் கராசியா** அகிய நான்கு பேர்களும் Sis. Vahitha Devadoss –வுடன் இணைந்து ***"விசுவாசமே நம் ஜெயம்"*** என்ற தலைப்பில் 10 நாட்களுக்கும் 10 பாடங்களை வேதாகமத்தி–ருந்து எடுத்து Students Work Book தயார் செய்வதற்கு தேவன் கிருபை கொடுத்தார். இந்த 10 நாள் தலைப்புக்கு ஏற்ற மாதிரி மனப்பாட வசனங்களும், பாடல்களும் (ஹிந்தி, குஜராத்தியில்) தயார் செய்யப்பட்டது. Students Work Book மற்றும் Teachers Guide எல்லாமே ஹிந்தி, குஜராத்தி என்று தனித்தனியாக Print செய்தோம். எழுதப்படிக்கத் தெரிந்த பிள்ளைகளுக்கு மட்டும் Work Book கொடுக்கும்படியாய் தீர்மானித்து, 15,000 Work Book அச்சடித்து சபைகளுக்கு கொடுத்தோம்.

**பயிற்சிகள்**

இந்த V.B.S. –ஐ நாங்கள் Shalom CBC என்று அழைக்கிறோம். இந்த Shalom CBC –யில் Directors Training, Dahod –ல் நமது பயிற்சி கூடத்தில் ஏப்ரல் மற்றும் மே முதல் வாரத்தில் நடத்தினோம். அனைத்து 405 சுதேச ஊழியர்களும் அவர்களோடு Sunday Class Teachers –ம் சேர்ந்து வந்து Directors Training எடுத்தார்கள். இந்த Training –ல் சுமார் 550 பேர் பயிற்சி பெற்றார்கள். 4 Batch ஆக பிரித்து ஒவ்வொரு Batch –லும் 150 பேர் பயிற்சி பெற்றார்கள். இதில் மிக நேர்த்தியாக சிறுவர் ஊழியம் ஏன் அவசியம் என்ற தலைப்பில் சகோ. தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் மிகவும் அழகாக விளக்கி அந்த Director –களுக்கு சிறு பிள்ளைகளைக் குறித்த பாரத்தைக் கொடுத்தார்கள். ஒவ்வொருவரும் சிறு பிள்ளைகளை குறித்த பாரத்தைப் பெற்று, எல்லா பீல் சிறுபிள்ளைகளையும் இயேசுவுக்கு சொந்தமாக்குவோம் என்று வைராக்கியமாய் சென்றார்கள்.

**சிறுவர்களின் மனநிலை**

இந்த பயிற்சியில் Beginners, Primary, Junior, Intermediate பிள்ளைகளின் வயது பிரிவுகளையும் அந்தந்த வயது பிரிவினர்களின் மனநிலை மற்றும் சுபாவங்கள் பற்றியும், இந்த பிள்ளைகளின் சுபாவங்களுக்குத் தக்கதாக எப்படி நடத்த வேண்டும்,

எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற காரியங்களுக்காக Directors –க்கு பயிற்சி கொடுக்கப்பட்டது.

**பாடல் வேளை**

Shalom CBC பாடல்கள் சிறுவர்களுக்கு மிகவும் உற்சாகத்தைக் கொடுக்கக் கூடியதாக இருந்தது. பாடல்கள் மூலமாகவே அந்த நாளுக்கு உரிய பாடங்களை வெகு விரைவில் கற்றுக் கொள்ளுகிற அளவுக்கு மிக நேர்த்தியாய் கர்த்தர் அமைத்துக் கொடுத்தார். பாடல் வேளையில் பயிற்சியில் உள்ளவர்கள் அனைவருமே ஆடிப் பாடிப் பரவசமடைந்தார்கள். Action Songs எல்லாம் மிக சிறப்பாக கற்றுக் கொடுக்கப்பட்டது.

**குறு நாடகங்கள்**

ஒவ்வொரு நாளும் உள்ள பாடத் தலைப்பில் குறு நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டது. நாடகங்களைப் பார்க்கும் போது மிக விரைவில் அவர்கள் மனதில் பதிந்து விட்டது.

**ஆத்துமா விலையேறப் பெற்றது**


இந்த பயிற்சியில் சிறு பிள்ளைகள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்றும் "சிறு பிள்ளைகள் என்னிடத்தில்வர இடம் கொடுங்கள். அவர்களை தடை பண்ணாதிருங்கள்" என்று இயேசு சொன்னார் என்றும், தேவனுடைய இராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்றும், இந்தச் சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்களென்று இயேசு சொன்னார் என்றும் பல வகைகளில் அவர்களுக்கு பேசப்பட்டது. அவர்கள் சிறுவர்களைக் குறித்த ஆத்தும பாரத்தை பெற்றுக் கொண்டார்கள்.


நமது Shalom CBC யின் நோக்கமே "எந்த பீல் சிறுவரும் நரகத்திற்கு போகக்கூடாது" எல்லா சிறுவர்களும் இரட்சிக்கப்பட வேண்டும். இந்த 10 நாட்களுக்குள்ளாய் எல்லா பிள்ளைகளும் இரட்சிக்கப்பட வேண்டும் என்கிற வாஞ்சையுடனும், பாரத்துடனும் இந்த Shalom CBC Training கொடுக்கும்படியாய் தேவன் கிருபை செய்தார். இப்பொழுது எல்லா சபைகளிலும் Shalom CBC Programme நடத்த கிருபை செய்தார். அதில் விசுவாசிகளின் பிள்ளைகளும் மட்டுமல்லாமல், புறவினப் பிள்ளைகளும் படித்தார்கள். சுமார் 20,000க்கும் அதிகமான ஆதிவாசிப் பிள்ளைகளை கர்த்தருக்குள் நடத்த தேவன் கிருபை பாராட்டினார்.

இந்த திட்டத்திற்காக சுமார் ரூ. 3 லட்சங்கள் வரை செலவு செய்யப்பட்டது. குறிப்பாக நம் பீல் மக்களையும், நம் ஊழியங்களையும் அதிகமான நேசிக்கின்ற **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்கள் இயேசு விடுவிக்கிறார் மூலமாக ரூ. 1லட்சம் காணிக்கை அனுப்பித் தந்து ஆசீர்வதித்தார்கள். அவர்களுக்காகவும் இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காகவும் தேவனைத் துதிப்போம். மேலும் இந்த திட்டத்திற்காக ஜெபித்தும், தியாகத்தோடு உற்சாகமாய் கொடுத்த யாவரையும் தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக!



# மருத்துவ முகாம்





நமது ஷாலோம் மிஷனெரி பணி முழு வீச்சுடன் நடந்து கொண்டிருக்கும் குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும், 2009ம் ஆண்டின் முதல் அரையாண்டிற்கான மருத்துவ முகாம்களை நடத்த தேவன் தாமே கிருபை பாராட்டினார். தேவனுடைய அளவற்ற கிருபையினால் Dr. Abel அவர்கள் தலைமையில் சேவை மனப்பான்மை கொண்ட மருத்துவக் குழுவால் இந்த முகாம் மிகவும் உற்சாகமாக தொடங்கப்பட்டது. CBN ஸ்தாபனம் இந்த முகாமிற்கு செய்த பேருதவிகள் மூலமாக இந்த மருத்துவ முகாம் வெற்றிகரமாக எல்லோராலும் பாராட்டும்படியாக நடத்தி முடிக்கப்பட்டது.

மருத்துவக்குழு 19–04–2009 அன்று மாலை நமது பணித்தள தலைமையிடமான தாகோத்தை வந்தடைந்தது. CBN ஸ்தாபனத்தி–ருந்து அனுப்பப்பட்ட Mr. பிச்சையா (Lab Technician) அவர்களும் வந்தடைந்தார்கள்.

முதல் நாள் மருத்துவ முகாம் சகோ. V. தேவதாஸ் அவர்களின் ஜெபத்துடன் ஆரம்பமானது. முதல் நாள் முகாம் தாகோத்திலுள்ள Hamilton Maclary மருத்துவமனையில் நடைபெற்றது. இதில் சுமார் 475க்கும் அதிகமானோர் மருத்துவ சிகிச்சை செய்யப்பட்டனர். சில நோயாளிகளுக்கு தொடர்ச்சியான மருத்துவத்திற்கு ஆலோசனைகள் கொடுக்கப்பட்டன. இரண்டாவது நாள் மருத்துவ முகாம் அதே இடத்தில் நடைபெற்றது. இதில் சுமார் 500க்கும் அதிகமானோர் மருத்துவ சிகிச்சை பெற்றனர். மூன்றாம் நாள் முகாம் மத்தியப்பிரதேசம், மேக்நகரிலுள்ள ஜீவன் ஜோதி மருத்துவமனையில் நடைபெற்றது. மத்தியப்பிரதேசத்திலுள்ள் நமது ஷாலோம் ஒருங்கிணைப்பாளர் சகோ. பால் முனியா அவர்கள் மருத்துவக் குழுவை மலர்மாலைகள் மற்றும் சால்வைகள் அணிவித்து அன்புடன் வரவேற்றார். இந்த மருத்துவ முகாமில் சுமார் 510க்கும் அதிகமான நோயாளிகள் மருத்துவ சிகிச்சை பெற்றனர். மேலும் நான்காம் நாள் மருத்துவ முகாம் இராஜஸ்தானிலுள்ள பிஜல்பூரில் வெற்றிகரமாக நடந்தேறியது. இந்த முகாமில் சுமார் 225க்கும் அதிகமானோர் பயன்பெற்றனர்.

இந்த நான்கு நாள் முகாம்களையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். அனைவருக்கும் தேவையான மருந்து மற்றும் மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன. மேலும் இந்த முகாம்கள் ஏழை எளிய மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

இந்த முகாம்களில் 722 பேர் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு, தொடர்ச்சியான மருத்துவத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டனர். காச நோயாளிகள் மாவட்ட DOT Centre ஐ அணுகுமாறு அறிவுறுத்தப்பட்டனர். 20 மலேரியா நோயாளிகள் ஆய்வு செய்யப்பட்டு சிகிச்சை பெற்றனர். அநேக இரத்த சோகை நோயால் பாதிக்கப்பட்டோர் சிகிச்சை பெற்றனர்.

அனைத்து மருந்துகளையும் ஏற்றவேளையில் வழங்கி உதவி செய்த CBN ஸ்தாபனத்திற்கும், இந்த முகாம்களுக்கு மிகவும் உதவியாக இருந்து அன்போடு ஒத்துழைப்பு தந்த மருத்துவ அதிகாரிகளுக்கும் குறிப்பாக மருத்துவமனை மேலாளரான Rev. Fr. Sylvester, அவர்களுக்கும் எங்களது உள்ளத்தின் ஆழத்தி–ருந்து நன்றி கூறுகிறோம். இந்த மருத்துவ முகாம்களில் தங்களை அர்ப்பணித்து பணிபுரிந்த Dr. Abel, Dr. Jolly, Dr. Inbakumar & Dr. Jasmine மற்றும் Mr. பிச்சையா (Lab Technician) (CBN) ஆகியோரை தேவன் வல்லமையாக பயன்படுத்தினார். மருத்துவ குழுவிற்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தக் கொள்கிறோம்.

மேக்நகர், (ம.பி.) பிஜல்பூர், (இராஜ) ஜாலோத் மற்றும் தாகோத் (குஜராத்) பகுதிகளில் நடைபெற்ற மருத்துவ முகாம்களின் சில காட்சிகள்.



மருத்துவ பரிசோதனை செய்யும் Dr. Abel அவர்கள்



மருத்துவ பரிசோதனை செய்யும் Dr. Inba அவர்கள்



மருத்துவ பரிசோதனை செய்யும் Dr. Jasmine அவர்கள்



Bro. Bitchaiah (Lab Technician) (CBN)



சிறுவர்களுக்கு அன்டிடன் மருந்து ஊட்டும் காட்சி



மருத்துவ சிகிச்சைக்காக காத்திருக்கும் மக்கள்





தரமான மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகின்றன

# சிறுவர் வேதாகம பள்ளி பயிற்சி - 2009


பாடல் வேளை


சிறப்பு செய்தி : சகோ. வே. தேவதாஸ்


நாடகங்கள் மூலமாக கற்றுக் கொடுத்தல்


பொம்மை காட்சிகள் மூலம் கற்றுக் கொடுத்தல்


கலந்து கொண்ட பயிற்சியாளர்கள்


அச்சிடப்பட்டுள்ள 20000 பயிற்சி புத்தகங்கள்


உணவு வேளை


பயிற்சி பெற்ற 520 இயக்குநர்களில் ஒரு பிரிவு

# சிறுவர் வேதாகம வகுப்புகள் (CBC) - 2009




சொக்வாடா கிராமசபை CBC



வண்ணம் தீட்டும் சிறுவர்கள்



செய்கையுடன் பாடல்கள்



பங்கு பெற்ற சிறுவர்களில் சிலர்



பாடல்கள் கற்றுக் கொடுத்தல்




தலையா கிராமசபை CBC

# ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம் – 2009



பயிற்சியளிக்கும் Dr. Jolly அவர்கள்



பயிற்சியின் போது



பயிற்சியளிக்கும் Sis. Ruby அவர்கள்




பயிற்சியளிக்கும் Dr. Abel அவர்கள்




பயிற்சியின் பலனை அறிவிக்கும் சகோ. கன்னுபாய்




பயிற்சி பெற்ற 70 சுதேச ஊழியர்கள்





இறுதிநாள் சிறப்பு நிகழ்ச்சியில் சிறப்புரை வழங்கும் சகோ. வே. தேவதாஸ் அவர்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் Dr. Inba அவர்கள்

# ஆரம்ப சுகாதார பயிற்சி

நமது ஷாலோம் சுதேச ஊழியர்கள் 70 பேர்களுக்கு குஜராத், தாகோத்திலுள்ள நமது பயிற்சி கூடத்தில் வைத்து ஆரம்ப சுகாதாரப் பயிற்சி கொடுக்கப்பட்டது. இந்த பயிற்சி ஏப்ரல் மாதம் 20ம் தேதி முதல் 24ம் தேதி வரை ஐந்து நாட்கள் நடைபெற்றது. இதை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். இந்த பயிற்சியை Dr. Mrs. Jolly, அவர்கள் ஒருங்கிணைத்து தர Dr. Abel, Dr. Inbakumar & Dr. Jasmine, Sis. Ruby, Sis. Annamuthu, Sis. Shanthi ஆகியோர் இணைந்து நடத்தித் தந்தார்கள். இந்த முகாமில் ஊழியர்களுக்கு குடும்ப கட்டுப்பாடு, HIV & எய்ட்ஸ், சர்க்கரை நோய், டி.பி, மலேரியா, டைபாய்டு, மஞ்சள் காமாலை, அலர்ஜி, ஆஸ்துமா, போன்ற நோய்களைப் பற்றியும் அவைகளின் தன்மைகளைப் பற்றியும் எடுத்துரைத்து விளக்கப்பட்டது. மேலும் விழிப்புணர்வும் முதலுதவியும் கற்றுக் கொடுக்கப்பட்டது. இந்த முகாமில் ஊழியர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த பயிற்சியில் கலந்து கொண்ட ஒவ்வொரு ஊழியரும் தங்கள் வாழ்க்கையில் முதல் முறையாக கற்றுக் கொண்ட பயிற்சியைக் குறித்து சாட்சியளித்தார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! Dr. Abel மற்றும் Dr. Inba அவர்கள் தலைமையில் தமிழ் நாட்டி–ருந்து வந்து பயிற்சி கொடுத்த மருத்துவக் குழுவிற்காக தேவனைத் துதிக்கிறோம். அந்த மருத்துவக் குழுவிற்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## மருத்துவ முகாமில் தேவன் செய்த அற்புதங்கள்

### சுகப்பிரவசம்

நமது ஊழியர் **சகோ. முகேஷ் வாசுனியா** அவர்களின் மனைவியான சகோதரி **வசுனியா** அவர்கள் பிரவசத்திற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார், இவருக்கு சிசேரியன் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என மருத்துவர்கள் கூறினார்கள். மேலும் இவர் ஒரு நீரிழிவு நோயாளி என்பது குறிப்பிட தக்கது. இந்நிலையில் நாங்கள் அனைவரும் இந்த சகோதரி சுகப்பிரவசம் கிடைக்க வேண்டி ஒன்றாக கூடி தேவனை நோக்கி ஜெபித்தபோது, தேவன் எங்கள் ஜெபங்களை கேட்டு இந்த சகோதரிக்கு சுகப்பிரவசத்தின் மூலம் ஒரு பெண்குழந்தையைக் கொடுத்தார்.

### வயிற்று வ-யி-ருந்து விடுதலை

நமது ஊழியர் **சகோ. நாத்துலால் கராசியாவின்** மகன் வயிற்று வ–யினால் பல மாதங்களாக அவதிப்பட்டு வந்தான் மேலும் இந்த வயிற்று வ– குணமாக பல ஆயிரங்கள் செலவு செய்துள்ளனர், ஆனாலும் குணமாகவில்லை. நமது மருத்துவ முகாமிற்கு இந்த சகோதரனை அழைத்து வந்தபோது மருத்துவர் பரிசோதித்து விட்டு மருந்துகள் கொடுத்துள்ளார். மருந்துகளை சாப்பிட்ட மறுநாள் காலையில் இவர் வயிற்றி–ருந்து பல கழிவுகள் வெளியேறியுள்ளன. உடனடியாகவே பூரண சுகத்தை அந்த சகோதரன் பெற்றான்.



# ஆதிவாசி மாணவர் கல்விக்கான நிதி உதவி

தேவ கிருபையினால் சுமார் 80 இலட்சத்திற்கும் அதிகமான பீல் ஆதிவாசிகள் மத்தியில் குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் மாநிலங்களில் கடந்த 18 வருடங்களில் சுமார் 600 கிராமங்களில் சுவிஷேசம் அறிவித்து சபைகளை ஸ்தாபிக்க தேவன் கிருபை செய்துள்ளார். அந்தகாரத்திலும், குடிப்பழக்கத்திலும் பாவ பிடியிலும் வாழ்ந்து கொண்டிருந்த சுமார் 20,000 குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றுள்ளார்கள். தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

பொதுவாக நாம் அறிந்தபடி பீல் ஆதிவாசிகள் தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பமாட்டார்கள். அங்கு பள்ளிக்கூட வசதிகளும் குறைவு. தொண்டு செய்யும் மனப்பான்மையுடன் பணி செய்யும் ஆசிரியர்களும் கிடையாது. பள்ளிக்கூடங்கள் செல்வதற்கு பல மைல்கள் நடந்து செல்ல வேண்டும். பெரும்பாலான கிராமங்களில் மின்சார வசதி இல்லாதபடியால் இரவு நேரங்களில் படிக்க வாய்ப்பு கிடையாது. ஆதிவாசி பிள்ளைகளை படிக்க உற்சாகப்படுத்தும் பெற்றோர்களும் படித்தவர்கள் கிடையாது. பொதுவாக கிராம சூழ்நிலைகள் இரவு நேரங்களில் குடிகாரர்களும், திருடர்களுமாய் சுற்றிவருவதால் படிப்பதற்கான சூழ்நிலைகள் கிடையாது. அப்படியே சற்று படிக்க வாஞ்சையாக இருந்தாலும் 5–வது வகுப்பிற்கு மேல் படிப்பது கடினம். கிராம ஆரம்ப பள்ளிகளில் ஒழுங்காக எழுத படிக்க கூட தெரியாத சூழ்நிலைகள் உண்டு. பெரும்பாலான கிராம மக்கள் தங்கள் பிள்ளைகளை நகரங்களில் தாங்கள் கூ– வேலை செய்யும்போது தங்கள் சிறுபிள்ளையை பாதுகாத்துக் கொள்ள படித்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு செல்வார்கள். ஒவ்வொரு கிராமங்களிலும் 8ம் வகுப்பு வரை படித்து பாஸ் பண்ணினவர்கள் மிகக் குறைவாய் இருப்பார்கள். அதிலும் மேலாக 10–ம் வகுப்பு, 12ம் வகுப்பு படித்து பாஸ் பண்ணினவர்களை கைவிரல் விட்டு எண்ணிவிடலாம். ஒரு கிராமத்தில் கல்லூரி படிக்கும் மாணவர்களை பார்ப்பது மிக மிக அரிது. இவைகள் எல்லாவற்றிலும் பார்க்கும்போது ஒரு ஆதிவாசி மாணவன் நன்றாக படிக்கும் போது அண்டை வீட்டார் அல்லது உறவினர் அவனை படிக்கவிடாதபடிக்கு பொறாமையுடன் அசுத்த ஆவிகளை ஏவிவிடுவார்கள். மேலும் 8–ம் வகுப்புக்கு மேல் படிக்கவேண்டுமென்றால் பிள்ளைகளுக்கு உணவு வசதி, நோட்டு, புத்தகங்கள் மற்றும் படிப்பதற்கான செலவீனங்களை ஏற்றுக் கொள்ள பொருளாதார வசதி குறைவு. மேலும் அநேகர் வறுமைக்கோட்டிற்கு கீழ் இருப்பதினால் தங்கள் பிள்ளைகளை படிக்க வைக்க மாட்டார்கள். இட ஒதுக்கீடு இவர்களுக்கு இருந்தாலும் அதை பெற்றுக் கொள்ளக்கூடிய கல்வித் தகுதி அவர்களுக்கு இல்லாதபடியினால் ஒவ்வொரு துறையிலும் ஆதிவாசி மாணவர்கள் முன்னேறி வர இயலாமல் தடை ஏற்படுகிறது.

இப்பொழுது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பாவம், சாபம், பிசாசு இவைகளி–ருந்து விடுதலைபெற்ற விசுவாசக் குடும்பங்கள் தங்கள் பிள்ளைகள் தங்களைப் போல் வாழக்கூடாது, தங்கள் பிள்ளைகள் படித்து சாட்சியுடன் வாழ வேண்டும் என்று வாஞ்சையுடன் எதிர்நோக்கி இருக்கிறார்கள். ஆகவே நாங்கள் இந்த தேவைகளை கண்டறிந்தவர்களாய் பாரத்துடன் ஒவ்வொரு வருடமும் கல்வியறிவு பணிக்காக நம்மால் முடிந்த உதவிகளை செய்து வருகிறோம்.

கடந்த இரு நூற்றாண்டுகளில் மேல்நாட்டு மிஷனெரிமார்கள் நமக்கு சுவிசேஷ ஒளியைத் தந்து ஆண்டவரண்டை நடத்தி அழகுமிகு ஆலயங்களைக் கட்டிக் கொடுத்தார்கள். இன்று தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் பல நகரங்களில் அன்று மிஷனெரிமார்களால் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ கல்வி நிலையங்கள் மூலமாக மூன்று நான்கு தலை முறையாக நாம் கல்வியறிவைப் பெற்று வருகிறோம். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு ஜாதி சமயத்தினரும் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசீர்வாதமாக இன்றும் அமைந்து வருகிறது. இது நாம் மறுக்க முடியாத உண்மை. இன்றைக்கு கிறிஸ்துவின் அன்பையும், கல்வியறிவையும் பெற்ற நாம் கல்வியறிவில்லாதவர்களுடைய கண்களை திறக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். தேவன் இந்த பீல் மக்களை தெரிந்தெடுத்து அற்புத அடையாளங்களோடு சுதேச ஊழியர்களை தெரிந்தெடுத்து கிராமங்கள் தோறும் சபைகளை தேவன் உருவாக்கி வருகிறார்.

## RtúTôÕ Sm êXm Lp®V±Ü ùTtß YÚm Àp B§Yô£ UôQYoL°u ®TWm.

| | | |
|---|---|---|
| 1. | அனைத்து சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் | – 560 |
| 2. | ஐ.பி. மிஷன் விடுதி ஜாலோத், குஜராத் | – 90 |
| 3. | ஷாலோம் விடுதி ஜெசவாடா, குஜராத் | – 30 |
| 4. | ஷாலோம் விடுதி அந்தர்வே–யா, மத்தியபிரதேசம் | – 25 |
| 5. | ஷாலோம் அனாதை பிள்ளைகள் ஆசிரமம் கோய்க்கா, இராஜஸ்தான் | – 25 |
| 6. | ஷாலோம் மிஷன் பள்ளி & விடுதி, இராஜஸ்தான் | – 220 |
| | மொத்தம் | – 950 |

ஆகவே கீழ்காணும் திட்டங்களை ஆவியானவருடைய ஒத்தாசையோடு நிறைவேற்ற பிரயாசப்படுகிறோம்.

✞ தாகோத் (குஜராத்), பான்ஸ்வாடா (இராஜஸ்தான்), ஜாபுவா (மத்தியபிரதேசம்) ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 2010–ஆம் ஆண்டுக்குள் 10 பள்ளிக்கூடங்கள் கட்டி எழுப்பவேண்டும்.

✞ 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களை பராமரிக்கக்கூடிய 100 ஆதிவாசி மாணவர்கள் விடுதிகளை மூன்று மாநிலங்களிலும் எழுப்ப வேண்டும்.

✞ 12–ம் வகுப்பு முடித்துவிட்டு உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி படிக்க முன்வரும் விசுவாசி பிள்ளைகளை முழுமையாக நிதி உதவி கொடுத்து, ஆலோசனைகள் மற்றும் பயிற்சி கொடுத்து தாங்க வேண்டும்.

✞ இதன் மூலமாக 10 வருடங்களில் இந்த மூன்று ஆதிவாசிகள் நிறைந்த இந்த மாவட்டங்களிலும் குறைந்தது 1000 ஆதிவாசி இளைஞர்கள் தங்கள் சமுதாயத்தில் சிறந்த தலைவர்களாக, அதிகாரிகளாக தொண்டு செய்து தங்கள் மாவட்டங்களை முன்னேற்ற வழி செய்பவர்களாக மாறுவார்கள் என்பது எங்கள் பாரமும் தரிசனமுமாகும்.

✞ பீல் ஆதிவாசி சிறுவர்கள் கல்வியறிவு பெற்று நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

✞ ஒரு பீல் ஆதிவாசி மாணவரை மாதந்தோறும் ரூ. 400/– கொடுத்து ஜெபித்து தாங்கக்கூடிய ஆதரவாளர்களை எழுப்ப வேண்டும்.

## *2009 கல்வியாண்டின் தேவைகள்*

இந்த 2009ம் ஆண்டு ஜுன் மாதத்தில் மேற்கண்ட மாணவர்களின் பள்ளிக்கான கட்டணம் (School Fees, Dress, Note Books) வாங்குவதற்கு ஒரு மாணவனுக்கு ரூ. 500/– வீதம் 950 மாணவர்களுக்கு **ரூ. 4,75,000/–** தேவைப்படுகிறது. உங்கள் குடும்பத்தின் சார்பில் அல்லது சபை, ஜெபக்குழு மூலமாக ஒரு சில மாணவர்களுக்காவது கல்வி உதவி செய்ய முன் வாருங்கள்.

**"மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்."** (மத்தேயு 25:40) இந்த வசனத்தின்படி பீல் ஆதிவாசி மாணவர்களுக்காக நீங்கள் தியாகத்தோடு கொடுக்கும் நிதி உதவிகளை ஆண்டவர் ஏற்றுக் கொண்டு **"உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்"** (ஏசாயா 53:13) என்ற வசனத்தின்படி கர்த்தர் உங்கள் சந்ததிகளை ஆசீர்வதிப்பாராக. காணிக்கை அனுப்பும்போது உங்கள் பிள்ளைகளுக்கான ஜெபக்குறிப்புகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்களும், ஊழியர்களும் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்கிறோம்.

## ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- மாதந்தோறும் ரூ.2000/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- மாதம் ரூ.500/- கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- மாதம் ரூ.400/- கொடுத்து ஆதிவாசி சிறுவர் ஒருவரை பராமரிக்க முன் வரலாம். (ஒரு ஆண்டிற்கு ரூ. 4,800/–)
- ரூ.60,000/- கொடுத்து ஒரு கிராம ஆலயத்தைக் கட்டிக் கொடுக்க முன் வரலாம்.
- மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- பீல் சுதேச ஊழியர்களுக்கு ரூ.2,500/-மதிப்பில் மிதிவண்டி  **(Cycle)** வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினைப் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ரூ.80/-வீதம் குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம். (5550 வேதப்புத்தகங்கள் தேவை)
- அனுதினமும் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக மறவாமல் ஜெபியுங்கள்.
- மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

இந்தப் பத்திரிக்கையை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**http://www.shalommission.in/magazineview.asp**

# பிரதிநிதிகள் தேவை

***அனுப்புவோர் தேவை தாங்குவோர் தேவை...***

தேவன் தந்த தரிசனத்தின்படி சுமார் 1 கோடி மக்கள் வாழும் பீல் பிராந்தியங்களில் தேவன் மகத்தான காரியங்களை கடந்த 17 வருடங்களில் செய்து வருகிறார். சுவிசேஷத்தை அறிவித்து விட்டு, அப்படியே விட்டுவிடும் பணியாக நம் ஊழியங்கள் அமையாமல் தொடர்ந்து அவர்களை ஆவிக்குரிய வாழ்க்கையில் நிலை நிறுத்தி, சபைகளை ஸ்தாபித்து, வருகை மட்டும் அவர்களை ஆயத்தப்படுத்தும் மிகப் பெரிய பொறுப்பை தேவன் தந்துள்ளார். ஆவிக்குரிய காரியங்கள் மட்டுமன்றி அவர்களுக்கு கல்வி, சுகாதாரம், மருத்துவம் மற்றும் முதியோர் கல்விதிட்டம், குடிநீர், பொருளாதார முன்னேற்ற திட்டப்பணிகளையும் செயல்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

2010ம் வருடத்தில் இருமடங்காக தேவன் ஆசீர்வதிக்கப் போகிறார் என்பதை உணர்ந்து ஜெபித்து செயல்பட உள்ளோம். ஷாலோம் ஊழியத்தை நேசித்து, ஜெபித்து, தாங்கி வரும் உங்களுக்காக தேவனை துதிக்கிறேன்.

மேலும் இவ்வருடம் நீங்கள் ஒவ்வொருவரும் இரண்டு புதிய ஊழிய பங்காளரை அறிமுகப்படுத்த அன்புடன் கேட்கிறேன். அதற்காக அதிகமான பத்திரிக்கை, ஊழிய அறிக்கை V.C.D. தேவையானால் தூத்துக்குடி தலைமை அலுவலகத்தை அணுகவும்.

ஊழியத்தின் சார்பு தேவைகளை சந்திக்க மாதம் ரூ.500/– கொடுத்து ஜெபித்துத் தாங்கக் கூடிய கிராம ஊழிய ஆதரவாளர்கள் 500 பேர் தேவை. இது மிக மிக அவசியமானதாகும். இந்த ஆதரவு மூலமாக பணித்தளத்தில் அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்படுகிறது.

மேலும் உங்கள் பகுதியில் நீங்கள் ஷாலோம் பிரதிநிதியாக மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தி ஆதரவு தொகையை ஜெபித்து சேகரித்து அனுப்ப பிரதிநிதியாக செயல்பட முன்வரலாம். நீங்கள் பணித்தளத்திற்கு ஊழியம் செய்ய வரமுடியவில்லை என்றால் அனுப்பும் பணியிலே, தாங்கும் பணியிலே ஈடுபடலாமே.

ரூ.100 கொடுக்கக்கூடிய 15 பேர்கள் அல்லது ரூ.100 கொடுக்க கூடிய 5 பேர்கள் கண்டுபிடித்து சிறிய ஜெபக்குழுவாக அமைத்து சுதேச ஊழியர்களை அல்லது கிராம ஊழியத்தைத் தாங்க முன்வாருங்கள்.

உங்கள் சபை மூலமாக சுதேச ஊழியர்களை பிரதிஷ்டை செய்து தாங்க அல்லது கிராம ஊழியத்தையோ, ஆதிவாசி சிறுவர்கள் பணியையோ தாங்க முன்வாருங்கள்.

பிரதிநிதியாக செயல்பட முன்வருபவர்களுக்கு இரசீது புத்தகம், மற்றும் ஊழிய அறிக்கை மாதிரி பத்திரிக்கைகள், V.C.D. இவைகளைத் தருகிறோம்.

*May God Bless You....*

## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADOSS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

# எ-சபெத் ஃபிரை

மிஷனெரி முன்னோடிகள்



**எ—சபெத் ஃப்ரை** 1780 ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள நார்விச் என்ற இடத்தில் பிறந்தார். இவரது தகப்பனார் ஜாண் கர்னே ஆவார். இவர் ஒரு பெரிய தொழிலதிபர். செல்வாக்குள்ள குடும்பத்தில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த எ—சபெத் தனது 12வது வயதில் தாயாரை இழந்தார். இந்த நாட்களில் வியாதியினால் பாதிக்கப்பட்டார். எ—சபெத் வா—ப பருவத்தில் இயேசுவை ஏற்றுக்கொண்டார். இவர் குவேக்கர்ஸ் (Quaker) என்னும் சபை பிரிவைச் சேர்ந்தவர். நார்விச் பட்டணத்தில் ஏழை எளிய மக்களை சந்தித்து வேதாகமத்தை சொல்—க் கொடுப்பதும், ஞாயிறு பாடசாலைகளில் சிறுவர்களை வழி நடத்துவதும் இவரது ஆரம்ப ஊழியமாக இருந்தது. தனது 20ஆவது வயதில், லண்டனில் தொழில் செய்த ஜோசப் ஃப்ரை என்பவரை திருமணம் செய்தார். எ—சபெத் தன்னுடைய 11 பிள்ளைகளையும் பராமரிப்பதில் அதிக நேரம் செலவழித்தார். திருமணத்திற்குப் பின் எஸ்ஸெஸ் என்னும் நகரில் ஊழியத்தைத் தொடர்ந்தார். ஏழைகளை பராமரிப்பதிலும், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதிலும் ஈடுபட்டார்.

19 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் நியூகேட் என்ற சிறைச்சாலையின் சீர்கேடான நிலைமையையும், அங்கு கைதிகள் எவ்வித வசதியுமற்ற இடத்தில் அடைக்கப்படுவதையும், சரியாக உணவு கொடுக்கப்படாமல் இருந்த நிலைமையையும் அறிந்தார். அதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து முறையிட்டதன் பயனாக சிறைச்சாலைகள் சீர்ப்படுத்தப்பட்டன. சிறையில் இருப்பவர்களுக்கு காலை மாலை ஜெபம், வேத வாசிப்பு போன்ற ஒழுங்குகளை தவறாமல் நடத்தி வந்தார். நியுகேட் சிறையில் ஆரம்பிக்கப்பட்ட இச்சீர்திருத்தம் நாட்டின் மற்ற சிறைகளிலும் ஏற்படுத்தப்பட்டு, கைதிகள் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தனர்.

ஆஸ்திரே—யாவிற்கு அனுப்பப்படும் கைதிகள் கப்பல் பயணத்தின்போது மிகவும் கொடுமையாக நடத்தப்படுவதை அறிந்தார். பெண் கைதிகள் நீண்ட கடல் யாத்திரையின்

போது விலங்குகள் கழற்றப்படாமல், மிகக் கேவலமாக நடத்தப்பட்டனர். சரியான உணவு, குளிருக்கு கம்பளி இவைகள் கொடுக்கப்படவில்லை. மேலும் அவர்களுக்கு மருத்துவ வசதிகள் கூட செய்யப்படாமல் அடிமைகளைப் போல நடத்தப்பட்டார்கள். இந்த சீர்கேடுகளைக் கண்டறிந்த எ–சபெத் ஃபிரை அரசாங்க அதிகாரிகளுக்கு தெரிவித்து சீர்திருத்தத்தை கொண்டு வந்தார். இவருடைய விடாமுயற்சியினால் கைதிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் கொஞ்சம் கொஞ்சமாக தடுத்து நிறுத்தப்பட்டது. கைதிகளில் அநேகர் தங்களை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து நேர்மையாக வாழக் கற்றுக் கொண்டனர். எ–சபெத்தின் கனிவான உள்ளம் கைதிகளை மிகவும் கவர்ந்தது. ஒவ்வொரு முறையும் கைதிகள் கப்பல் இங்கிலாந்தி–ருந்து புறப்படும்போது எ–சபெத் அவர்களை தவறாமல் சந்தித்து, ஒவ்வொரு கைதிக்கும் கம்பிளி ஆடையும், வேதாகமும் கொடுத்து வழியனுப்புவார். இவ்வூழியத்தை 25 வருடங்களாக செய்து நிறைவேற்றினார்.

பெண்கள் வெளியே செல்வதை சமுதாயம் விரும்பாத காலகட்டத்தில் துணிச்சலுடன் செயலாற்றி, கட்டுண்டவர்களை விடுதலையாக்க செயல்பட்டார். எ–சபெத் ஃபிரை ஒரு சீர்திருத்தக்காரராக இருந்தாலும், கிறிஸ்தவ உலகம் இவரை சிறைக் கைதிகளின் மிஷனெரி என்றே கருதுகின்றது.

கட்டுண்டவர்களை விடுதலையாக்க வந்த ஆண்டவராகிய இயேசுவை, சிறையில் அடைக்கப்பட்டவர்களுக்கு அறிவிக்கும்போது, காவ–ல் இருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள் என்று கூறி தேவன் மெச்சிக் கொள்வார்.

இன்றும் பல நாடுகளிலும், சபைகளிலும் சிறை ஊழியம் தொடர்ந்து நடைபெற்று வருவதற்கு எ–சபெத்தின் துணிச்சலான இவ்வூழியம் ஒரு முன்னோடியாக உள்ளது.


***ஷாலோம் கிளை அலுவலகங்கள் :***

| **சகோ. B. எபனேசர் டேனியல்,** | **சகோ. G. செல்வதுரை,** |
| --- | --- |
| New No. 15, Old No. 59,<br>பஜனை கோயில் தெரு,<br>சூளைமேடு, சென்னை – 600–094<br>செல் : 093444–75468 | நெடு நீளம் புத்தன் வீடு,<br>பாகோடு P.O<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br>செல் : 093447–24395 |

## பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **முக்தி டோடியார்** |
| தகப்பனார் பெயர் | : | கல்லா டோடியார் |
| தாயார் பெயர் | : | ரத்தன்பேன் |
| பிறந்த நாள் | : | 02.02.1996 |
| படிக்கும் வகுப்பு | : | VI |
| சொந்த ஊரின் பெயர் | : | போர்பாட்டோடு |
| தாலூகா | : | குசல்கட் |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |
| தங்கி படிக்கும் விடுதி | : | Debri |

**மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

முக்தி டோடியாரின் தகப்பனார் கல்லா டோடியார். இவர் அநேக பாவங்களுக்கு அடிமைப்பட்டு மிகவும் மோசமான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். மேலும் ரொம்ப காலம் வியாதியினால் துன்பப்பட்டு வந்தார். வியாதி குணமாக மருத்துவம் செய்தார், மந்திர கிரியைகள் செய்தார் ஆனாலும் குணமாகவில்லை. வாழ்க்கையில் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்ட இவர் தாட்கா கிராமத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார். அந்தக் கூட்டத்தில் இவருக்காக ஜெபித்தபோது தேவன் இவரைத் தொட்டு அற்புதமாக குணமாக்கினார். உடனே இயேசுதான் ஜீவனுள்ள தேவன் என்று அறிக்கைப் பண்ணி இயேசுவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்; மேலும் தன்னை ஊழியத்திற்கென்று ஒப்புக் கொடுத்து தமது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-** இவள் ஜெபம் பண்ணுவதிலும், வேதம் வாசிப்பதிலும், பாடல் பாடுவதிலும் மிகவும் வாஞ்சை கொண்டவள். ஆங்கிலம் நன்றாக படிப்பாள். படித்து டாக்டராக வேண்டும் என்ற வாஞ்சை உள்ளது.

**ஜெபியுங்கள்:-** நல்ல முறையில் படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், நல்ல ஆரோக்கியத்திற்காகவும், குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும், பெற்றோர் செய்கின்ற ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுவனைத் தாங்குபவர் :** **Mrs. Beena Marsh,** Marthandam.


(இந்த சிறுமியைப் போல் இன்னும் 260 பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.)

## அன்பான உண்டியல் ஆதரவாளர்களுக்கு...

# நினைவுப்படுத்துகிறோம்......


அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!

இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டிய–ல் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து M.O, D.D, Cheque மூலமாக Sharing Love Mission என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டிய–ன் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அ திறக்க சாவி (Key) வேண்டுமானால் 9345675468 இந்த செல் நம்பருக்கு தொடா ள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை (Key) அனுப்பி வைக்கிறோம்.



---

# சந்தாவைப் பற்றி



அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காகவும் இந்த மலரை அனுப்புகிறோம்.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிருப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2009) பத்திரிக்கைச் சந்தாவை செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கவும், பத்திரிக்கை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/–    ஆயுள் சந்தா : ரூ.600/–**

## நாட்டு நடப்புச் செய்திகள்....

அணு ஆயுதத்தை சுமந்துசெல்லக்கூடிய அக்னி–2 ஏவுகணை ஒரிசாவின் பாதுகாப்பு தளத்தி–ருந்து வெற்றிகரமாக பரிசோதித்துப் பார்க்கப்பட்டது. 2000 கிலோ மீட்டருக்கு மேல் பறந்துசென்று தாக்கக்கூடிய இந்த ஏவுகணை பாத்ரக் மாவட்டத்தில் தமாரா அருகே வீலா தீவி–ருந்து பரிசோதித்துப் பார்க்கப்பட்டதாக அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன. இது வழக்கமான பரிசோதனைதான் என்றும் அவ்வட்டாரங்கள் கூறின. 16 டன் எடைகொண்ட அக்னி–2 ஏவுகணை. 1000 கிலோ எடைகொண்ட பொருளை சுமந்துசெல்லக்கூடியது. எடையைக்குறைப்பதன் மூலம் பறக்கும் திறனை 3000 கிலோமீட்டர் தூரம் வரை அதிகரிக்கலாம் எனத் தகவல்கள் தெரிவித்தன.

நாடுமுழுவதும் பரப்பரப்பாக எதிர்பார்க்கப்பட்ட பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் 16.05.2009 அன்று அறிவிக்கப்பட்டது. இந்த தேர்த–ல், எந்த ஒரு கட்சிக்கோ அல்லது கூட்டணிக்கோ முழு மெஜாரிட்டியுடன் ஆட்சி அமைக்க முடியாத அளவுக்கு இழுபறி நீடிக்கும் என்று கருத்துக்கணிப்புகள் வெளியாகி இருந்தன. இந்த நிலையில் 16.05.2009 அன்று காலை 8 மணிக்கு ஒட்டு எண்ணிக்கை தொடங்கிய சில நிமிடங்களி–லேயே, கட்சிகளின் முன்னணி நிலவரம் வெளிவரத் தொடங்கியது. கருத்துக்கணிப்புகளுக்கு மாறாக, தொடக்கத்தில் இருந்தே காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அதிக இடங்களில் முன்னிலை பெற்று வந்தது. 543 உறுப்பினர்களை கொண்ட பாராளுமன்றத்தில், ஆட்சி அமைப்பதற்கு தேவையான 'மேஜிக் நம்பர்' 272 ஆகும். தொடர்ந்து காங்கிரஸ் கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்று முன்னணியில் இருந்து வந்ததால், அந்த அணி மத்தியில் மீண்டும் ஆட்சியை பிடிப்பது உறுதியானது.மெஜாரிட்டிக்கு தேவையான 272 இடங்கள் கிடைக்காவிட்டாலும் மற்ற கட்சிகளின் ஆதரவுடன் காங்கிரஸ் கூட்டணி அரசு அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. டாக்டர். மன்மோகன் சிங் அவர்கள் பிரதமர் ஆகிறார்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இந்த ஆண்டு 6 லட்சத்து 90 ஆயிரம் மாணவ–மாணவிகள் பிளஸ்–2 தேர்வு எழுதியிருந்தனர். தமிழ்நாட்டில் பிளஸ் 2 பரீட்சை முடிவு 14.05.2009 அன்று வெளியிடப்பட்டது. இதில் 4 பேர் 1,200–க்கு 1,183 மார்க்குகள் வாங்கி முதல் இடத்தை பிடித்தனர். 83 சதவீதம் மாணவ – மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். வழக்கம்போல் இந்த ஆண்டும் மாணவிகளே அதிக சதவீதத்தில் (85.5) தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். மாணவர்களின் தேர்ச்சி விகிதம் 80.3 ஆகும்.


### எங்களுடன் தொடர்பு கொள்ள

<u>தலைமை அலுவலகம்</u>

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

Bro. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

# உதயப்பூரா கிராம ஆலயம்

## (மத்தியப்பிரதேசம்)



மத்தியப்பிரதேசம் மாநிலத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்தில் மேக்நகர் தாலுகாவில் மிகவும் உள்ளடங்கிய கிராமம் உதயப்பூரா. இங்குள்ள மக்கள் கொள்ளையடிப்பதும், சாராயம் குடிப்பதும் அசுத்த ஆவிகளை வணங்குவதும், மந்திரவாதிகளை நாடுவதும் வழக்கமாக கொண்டவர்கள். இவர்களுக்கு இயேசுவைப் பற்றி ஒன்றும் தெரியாது. இந்த நிலையிருந்து வந்தவர்தான் சகோ. கல்சிங்புரியா. அசுத்த ஆவியின் பிடியில் சிக்குண்டு வாழ்ந்து வந்ததால் சகோ. கல்சிங்புரியாவின் குடும்பத்தார் குழந்தை பாக்கியம் இன்றி கஷ்டப்பட்டார்கள். சகோ. கல்சிங்புரியாவும் சரீர ஊனத்தால் அதிக வேதனைப்பட்டார். மருத்துவமனைக்குச் சென்றும், மந்திரபூஜைகள் செய்தும் பகள் செலுத்தியும் எந்த பயனுமில்லை. நம் சுதேச ஊழியர் சகோ. கோர்சிங் மேய்டா மூலமாக இயேசு கிறிஸ்துவைக் குறித்து கேள்விப்பட்டு குன்கேடாவில் நடந்த ஷாலோம் கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தபோது பிசாசின் கட்டுகளிருந்து தேவன் விடுதலையை கொடுத்து ஒரு அழகிய பெண் குழந்தையையும் கொடுத்து ஆசீர்வதித்தார். அதனால் தேவனை ஆராதிக்க தனது வீட்டை திறந்து கொடுத்தார். சில நாட்கள் சகோ. மகன்பாய் கூட்டத்தை நடத்தி வந்தார். தனக்கு அற்புதம் செய்த தேவனை ஆராதிக்க ஒரு ஆலயம் அவசியமெனக் கண்டு தனது சொந்த நிலத்தை ஆலயம் கட்டுவதற்கென கொடுக்கவே அந்த இடத்தில் ஒரு அழகிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது.

01.04.2007 அன்று பாளையங்கோட்டையைச் சேர்ந்த பேராசிரியர். C.S. கிறிஸ்டோபர் அவர்கள் மூலமாக பிரதிஷ்டை செய்யப்பட்டது. தற்போது சகோ. கல்சிங் புரியா ஊழியராக இருந்து வருகிறார். தற்போது 30 குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக் கொண்டு ஆலயத்திற்கு வருகிறார்கள்.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

## ஷாலோம் பள்ளி & மற்றும் விடுதிகளில் தங்கி பயின்று வரும் பீல் ஆதிவாசி மாணவர்கள்






ஷாலோம் பள்ளி, பிஜல்பூர், இராஜஸ்தான்



ஜபி. மிஷன், குஜராத்



கோய்க்கா, இராஜஸ்தான்



ஜெசவாடா, குஜராத்



அந்தர்வேயா, மத்தியப்பிரதேசம்

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss